கடும் சிலிண்டர் தட்டுப்பாடு!

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

தாம்பரம் சண்முகம் சாலை பாரதி திடலில் பெருங்களத்தூர் வடக்கு தெற்கு மற்றும் தாம்பரம் மேற்கு பகுதி மதச்சார்பற்ற முற்போக்குகூட்டணி நடத்தும் சமையல் எரிவாயு (LPG) தட்டுப்பாட்டை கண்டித்தும் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமை கூட்டணியை கண்டித்தும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 4,வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் தாம்பரம் லயன் இ.மணி வரவேற்றார். எஸ்.இந்திரன்,எஸ். சேகர்,தா.கிருஷ்ணாதாஸ்,ஏ.பாலாஜி,எஸ்.நாரயணன்,எஸ்.சாகுல் ஹமீது,சாமுவேல் எபிநேசர்,மா.செழியன்,எம்.அப்துல்ரஹீம்,பா.இ.இளமாறன்,பி.பொன்ராஜ்,R. ராமகிருஷ்ணன்,கி ராஜா முஹம்மது,எம்.ஜாகீர்உசேன்,பி.ஆர்.பவுல்நியூலின்மா ஆகியோர் முன்னிலை வகித்தனர். தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்,எல்,ஏ; கண்டன உரையாற்றினர். மேயர்.க.வசந்தகுமாரி,எம்.யாகூஃப் மற்றும் தோழமை கட்சிகள் நிர்வாகிகள் என ஆயிரக்கணக்கானோர்கள் பங்கேற்றனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவுறுத்தலின் படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு. தனியரசு அவர்களின் எற்பாட்டில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் சமையல் எரிவாயு கட்டுப்பாட்டை கண்டித்து நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய பா.ஜ.க.அரசை கண்டித்து கண்டன உரை ஆற்றினார் மாநில தலைவர் S.D.P.I. முபாரக் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எர்ணாவூர் ஏ.நாராயணன் மேற்கு பகுதி செயலாளர் வை.ம.அருள்தாசன் மத்திய பகுதி செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் வி.கண்ணதாசன் குறிஞ்சி எஸ்.கணேசன் எம்.எஸ்.திரவியம் ஜான் அலெக்சாண்டர் ஆர்.ஜெயராமன் எஸ்.சுகுமாறன் டி.வி.முருகன் வெங்கடேஷ் வேம்புலி எம்.செந்தில் குமார் கே.ஜாபர் உசேன் எம்.இப்ராகிம் காஜா நசிர் அகமது எல்.ஜாபர் சாதிக் எஸ்.டி.மோகன் என்.ராஜேந்திரன் எஸ்.கதிரவேல் டி.பாபு ரகுநாதன் ஜி.எஸ்.ராஜி எம்.மதுரை வீரன் க.முத்துராமலிங்கம் முருகன் மா.முரளி யூசுப் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்

ஒன்றிய பாஜக அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையாலும், போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்தும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்றம முற்போக்குக் கூட்டணி சார்பில் திருவள்ளூர் மத்திய மாவட்ட பூவிருந்தவல்லி நகரத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை நடைபெற்றது இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டமன்றஉறுப்பினர்ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு கண்டன உரை ஆற்றினார்கள் உடன் நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், நிர்வாகிகள் க.ஸ்ரீதர், இளைஞரணி கே.சுரேஷ் குமார், எச்.தாஜுதீன், துரைபாஸ்கர், அப்பர்ஸ்டாலின், டில்லிராணி மலர் மன்னன், எஸ்.அசோக்குமார், ஜெ.சுதாகர், இரா. புன்னியகோட்டி, ப.அன்பழகன், எஸ்.சௌந்தரராஜன், ஏ.விமல்ஆனந்த், க.ஷாஜகான், திமுகவினர் மற்றும் பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சட்டமன்ற உறுப்பினர், கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, மாவட்ட அவைத் தலைவர் மாம்பலம் சந்திரசேகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி, மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

உதகை கிழக்கு மற்றும் மேற்கு நகர கழகம் சார்பில் உதகை ஏ.டி.சி., பகுதியில் கிழக்கு நகர பொறுப்பாளர் ஜார்ஜ் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர் தம்பி இஸ்மாயில், நகரமன்ற தலைவர் வாணீஸ்வரி, ஊட்டி எம்.எல்.ஏ., கணேஷ், மாவட்ட தலைவர் நாகராஜ், மதிமுக மாவட்ட செயலாளர் சிவகுமார், சி.பி.எம் சங்கரலிங்கம், மமக மாவட்ட செயலாளர் அபுதாஹீர், விசிக தொகுதி பொறுப்பாளர் கட்டாரி, மஜக மாவட்ட செயலாளர் பெரியார் கார்த்திக், தேமுதிக நகர செயலாளர் அபுதாகீர் மற்றும் திமுக தோழமை கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டனர்.

மாதவரம் வடக்கு பகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் கேஸ் சிலிண்டர் வழங்குவதில் மெத்தனம் காட்டும் ஒன்றிய அரசையும் அதன் அடிமை கூட்டணியையும் கண்டித்து மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் 19 ஆவது வட்டம் மாத்தூரில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நிர்வாகிகளும் பொதுமக்களும் கண்டன கோஷங்கள் எழுப்பி எதிர்ப்பை பதிவு செய்தனர். வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் வரவேற்பில், இ. கண்ணப்பன், கே. கருணாகரன், பி.எஸ். சந்துரு.வி. ஆர். குப்பன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கொசப்பூர் தன்ராஜ், விடுதலை சிறுத்தைகள் பொற்கொடி, கம்யூனிஸ்ட் கட்சி ராணி, மதிமுக பாண்டியன் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டார்கள்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி, விஜயநகரில் பகுதிக் கழகப் பொறுப்பாளர், 176 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி வே.ஆனந்தம் தலைமையில் தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை என தொடர்ந்து வஞ்சித்துக் கொண்டிருக்கும் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு முழக்கமிட்டனர்.

கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் 73-வது பிறந்த நாள்

108 'அ' வட்டம் சேத்துப்பட்டில் 500 பேருக்கு அறுசுவை உணவு!

இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, மார்ச்.16-

கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் 73ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கழகச் சட்டத் துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதியில் பொதுமக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கிடும் வகையில் 12 தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதன் ஒரு பகுதியாக, 108 'அ' வட்டம், சேத்துப்பட்டு, அம்பேத்கர் திடலில் நடந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் அப்பகுதியைச் சேர்ந்த 500 பேருக்கு அறுசுவை மதிய உணவு வழங்கினார்.

இந்நிகழ்வில் அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி, 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாறன்; 108 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பு. சதிஷ்குமார், 108வது வட்ட செயற்குழு உறுப்பினர் வீ.பாபு, பகுதிப் பிரதிநிதி முனுசாமி, முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், பெரியமேடு சரவணன், எம்.இ.தேவநிதி, எட்டு (எ) விஜயகுமார், பாக முகவர் கவிதா, 108 'அ' வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஸ்ரீதர், சூர்யா; 77வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சதீஷ், 78 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.இ. மகேஷ்குமார், 99 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் குணா மற்றும் கந்தன், சுந்தர்ராஜ், எஸ்.கண்ணன், ரோஷன், கபிலன், சத்யகலா உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்களும், கழகச் செயல்வீரர்களும் கலந்துகொண்டனர்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து

கும்மிடிப்பூண்டி பேரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

திருவள்ளூர், மார்ச்.16-

முதல்வர் ஆணைக்கிணங்க கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி பேரூராட்சி பஜார் வீதியில் கும்மிடிப் பூண்டி பேரூராட்சி மன்ற தலைவர் சகிலாஅறிவழகன், துணைத்தலைவர் எம்.கேசவன், மாவட்ட மீனவ அமைப்பாளர் கே.ஆறுமுகம் முன்னிலையில் தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை; அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை! தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் பா.ஜ.க. அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் தலைமை செயற்குழு உறுப்பினரும், டி. கோவிந்த ராஜன் கும்மிடிப் பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான தலைமையில் நடைபெற்றது.

ஆர்பாட்டத்தில் இரா. அறிவழகன், எஸ்.ரமேஷ், கே.ஆறுமுகம், அப்துல்கரிம், எஸ்.ராமஜெயம், இரா. ரமேஷ், எஸ்.எம்.திரு நாவுக்கரசு, பா.பரத்குமார், காளிதாஸ், கே.எஸ்.கோபி, டி. கே.ராஜா, எம்.குப்பன், சண்முகம், பாலாஜி, சூப். முனியாண்டி, கே.ஜி.நமச்சிவாயம், இஸ்மாயில், தண்டலச்சேரி.அருள், இளவரசன், ஜெயசந்திரன், ராஜசேகர், பா.ஆனந்தராஜ், தமிழ்சாதிக், சிவா, நந்தகோபால், எஸ்.செந்தில், உமாபதி, சண்முகம், ஆறுமுகம், அயூப்கான், இஜாஸ், மஸ்தான், காமாட்சி, மீனாட்சி, அரப்பு. பாபு, கே. என்.பழனி காங்கிரஸ் நிர்வாகிகள் திவான் முகமது, வழக்கிறஞர் சித்ரா, ரோஸ், ராமலிங்கம், மதிமுக நிர்வாகிகள் ரவிக்குமார். பாபு, தேமுதிக நிர்வாகிகள் ஜெயலேவ், நந்த கோபல், சந்திரசேகர், விடுதலை சிறுத்தைகள் பா.நேசகுமார், நீலவானத்து நிலவன், மணி கண்டன், சம்பத், பாக்ஸர் மணி, மக்கள்நீதி மையம் சுதாகர், சிபிஎம்.நிர்வாகிகள் ராஜேந்திரன், கோபால், சிபிஜ அருள், மனிதநேயமக்கள் கட்சி நிர்வாகி சாதிக் பாஷா மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.